**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 100/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராமசந்திரன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கையா | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.09.2025.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் நிறுவனத்தில் கான்ட்ரக்டராக பணி செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். கிள்ளியூர் வில்லேஜில் உள்ள சர்வே எண் 508/11A சொத்திற்கு 02.04.2012ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் பராமரிப்பு பணிக்காக நான் சென்ற போது நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனது சொத்தில் உள்ள மாஞ்சி மரத்தை வெட்டிக் கொண்டிருந்த பொழுது நான் பார்த்தேன். அவர்களுடன் வேறு சில நபர்களும் இருந்தார்கள்.

2. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடத்தில் என்னுடையது சொத்து நீங்கள் ஏன் மரங்களை வெட்டுகீறிர்கள் என்று கேட்டேன். அதற்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் சேர்ந்து அருகில் இருந்த அரிவாளை எடுத்து "நீ ஏன் இங்கு வந்தாய்" என்று "நீ இங்கு நின்றால் உன்னை வெட்டிக் கொன்று விடுவேன்" என்று மிரட்டி மரண பயத்தை ஏற்படுத்தினார்கள். மேலும் TN74R1121 என்ற எண் கொண்ட டெம்போ எனது விளையின் அருகே நின்றுக் கொண்டிருந்தது.

3. அந்த மரத்துண்டுகளின் அப்போதைய மதிப்பு சுமார் 30 ஆயிரத்திற்கு மேல் இருக்கும். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்னை மிரட்டிய உடன் நான் பயந்து போய் கருங்கல் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்

புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. நான் புகார்மனு கொடுத்தவுடன் போலிசார் சம்பவயிடத்திற்கு விரைந்து வந்த போது வெட்டிய மரங்களை குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மேற்சொன்ன டெம்போவில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான ரங்கநாதன் என்பவர் ஓடி ஒளிந்துக் கொண்டார். 2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ராஜகோபால் என்பவரை போலிசார் மடக்கி பிடித்தார்கள்.

5. போலிசார் 2வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை போலிஸ் வாகனத்தில் ஏற்றி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நானும் காவல்நிலையத்திற்கு சென்றேன். சம்பவத்திற்கு பயன்படுத்திய டெம்போவையும் அதில் இருந்த மாஞ்சி மரத்துண்டையும் போலிசார் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்கள். நான் நீதிமன்றத்தில் மனு செய்து மாஞ்சி மரத்துண்டை பெற்றுக் கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 100/2019 P.W. 2/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சீனிவாசன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கையா | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வங்கியில் பணி செய்து தற்சமயம் பணி ஓய்வு பெற்று விட்டேன். அ.சா.1 எனது தம்பி ஆவார். 03.04.2012ம் தேதி காலை 10 மணி முதல் 10.30 மணிக்குள் இருக்கும் கிள்ளியூரில் உள்ள என்னுடைய தோப்பில் நான் நின்றுக் கொண்டு பராமரிப்பு வேலை செய்துக் முடித்து விட்டு வீட்டிற்கு செல்வதற்காக ரோட்டில் வந்த பொழுது போலிசார் அங்கு நின்றுக் கொண்டிருந்தார்கள். என்னிடம் அருகில் உள்ள விளையில் மரங்களை வெட்டியிருப்பதாகவும் அந்த இடத்தை காட்டும் படியும் என்னிடம் கூறினார்கள்.

2. நான் உடனே போலிசாரை அழைத்துக் கொண்டு மரம் வெட்டப்பட்டிருந்த இடத்திற்கு சென்றோம். போலிசார் அந்த இடங்களை பார்வையிட்டார்கள். அதன்பிறகு சம்பவயிடம் குறித்து எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் **பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. அதன்பிறகு போலிசார் அத்தாட்சியில் மரத்துண்டுகளை கைப்பற்றினார்கள். அதிலும் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் **அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் வேறு ஒரு நபரும் கையொப்பம் செய்தார். அவருடைய பெயர் தற்பொழுது எனக்கு ஞாபகம்இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.